முக்கூடற்பள்ளில் வேளாண் மரபுகள்

Mukkoodal Pallu: A Window into Ancient Tamil Agricultural Traditions

முனைவர் **சி. முடியரசன்**
உதவிப்பேராசிரியர்
கணேசர் கலை அறிவியல் கல்லூரி
மேலைச்சிவபுரி.

Abstract

*The **Mukkoodal Pallu** is a unique Tamil literary work that offers a detailed and vivid portrayal of the agricultural traditions of the ancient Tamil people. It provides a historical record of farming life, highlighting the importance of cultivation, the tools used, the beliefs held, and the social contributions of the farming community, known as the **Pallars**.In essence, the Mukkoodal Pallu serves as a valuable document that not only records the technicalities of farming but also encapsulates the lifestyle, beliefs, and collective spirit of the people who worked the land.*

Keywords: *Spy, Pallan, Agriculture, Paddy, Sowing, Harvesting, Pallu Literature*

ஆய்வுச்சுருக்கம்

முக்கூடற்பள்ளு என்பது பண்டைய தமிழ் மக்களின் வேளாண் மரபுகளை விரிவாகவும் தத்ரூபமாகவும் சித்தரிக்கும் ஒரு தனித்துவமான தமிழ் இலக்கியப் படைப்பாகும். இது விவசாய வாழ்வின் வரலாற்றுப் பதிவாக விளங்குவதோடு, சாகுபடியின் முக்கியத்துவம், பயன்படுத்தப்பட்ட கருவிகள், அவர்கள் கொண்டிருந்த நம்பிக்கைகள் மற்றும் பள்ளர்கள் என அறியப்பட்ட விவசாய சமூகத்தின் சமூகப் பங்களிப்புகளையும் எடுத்துக்காட்டுகிறது. சாராம்சத்தில், முக்கூடற்பள்ளு என்பது வேளாண்மையின் தொழில்நுட்ப நுணுக்கங்களைப் பதிவு செய்வது மட்டுமல்லாமல், நிலத்தில் உழைத்த மக்களின் வாழ்க்கை முறை, நம்பிக்கைகள் மற்றும் கூட்டு மனப்பான்மையையும் உள்ளடக்கிய ஒரு மதிப்புமிக்க ஆவணமாகத் திகழ்கிறது.

திறவுச்சொற்கள்

உளவு, பள்ளன், வேளாண்மை, நெல், விதைத்தல், அறுவடை, பள்ளு இலக்கியம்

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்

தமிழரின் முதன்மையான தெழில் வேளாண்மையாகும். வேளாண்மை செய்தற்கு பொருட்டே ஆதிமனிதன் ஆற்றங்கரைகளில் குடியிப்புகளை அமைத்தான். ஆடவர் வேட்டைத்தொழில் போன்ற உடல் உழைப்புத் தொழில் மேற்கொள்ள பெண்கள் குடும்பத்தை நிர்வகித்து வந்தனர்.உழவு,மரம் வெட்டுதல், மண் வெட்டுதல் போன்ற பணிகளை ஆண்களும் பயிர் காத்தல், பக்குவப்படுத்துதல், சேமித்தல் ஆகிய வேலைகளைப் பெண்களும் பகிர்ந்து செய்து வந்தனர்.

உழவின் சிறப்பு:

உழவுத் தொழில் பற்றி வள்ளுர் சிறப்பித்து கூறுகிறார். வள்ளுவர் உழவுத் தொழில் பற்றி மட்டும் தனி அதிகாரம் அமைத்து கூறுகிறார். சமவெளிகளில் தங்கிவிட்ட மனிதன் கண்டுபிடித்த முதல் தொழில் உழவுதான். பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உழவுத் தொழில் தோன்றிவிட்டது. இதைதான் மனிதனை மற்ற மிருகங்களிலிருந்து மேம்பட்டவயாக மாறியது.

"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்"

என்ற பழமொழியும் உழவர்களைப் பற்றி சொல்லப்படுகிறது. பழமையை மறந்துவிட பண்பு கொண்ட வள்ளுவர் இயல்பாகவே உழவு பற்றிப் பேச தனி அதிகாரம் படைத்துள்ளார். வள்ளுவர் பாயிரவியலில் உழவின் சிறப்பைப் பாடாமல் 104 வது அதிகாரமாகப் பாடியுள்ளார்.

"ஏரின் உழாஅர் உழவர் புயலென்னும்
வாரி விளங்குன்றிக் கால்"

(குறள்-14)

மழையின் சிறப்பைப் பாடவந்தவர் 'ஏர்' என்றும் 'உழவர்' என்றும் நேரிடையாக உழவு பற்றிப் பேசியுள்ளார். குறைவில்லாமல் பொழிய வேண்டிய மழை இல்லாது போகுமானால் உழவர் தங்கள் ஏர்களைப் பூட்டி உழவை மேற்கொள் மாட்டார் என்பது இதன் பொருள் உழவர்கள் படுத்துவிட்டால் உலகமே படுத்து விடும் என்பது இதன் மறைபொருள். இவற்றில் குறிப்பால் உணர்த்திய வள்ளுவர் உழவு அதிகாரத்தின் முதல் குறளில் வெளிப்படையாக சொல்கிறார்.

"சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை"

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்

(

குறள்- 1031)

உலகமே உழவை நம்பி சுழன்றுக் கொண்டிருப்பதால் உழவே தலையாயத் தொழீல் என்பது இதன் மூலம் சொல்லப்படும்.

உழவர்கள் - மேற்குடி மக்கள் :

உழவர்கள் சமுதாயத்தின் மேற்கு மக்கள் என வள்ளுவர் கூறுகிறார். அரசன் முதல் ஆண்டிவரை உழவர்களை நம்பித்தான் வாழ வேண்டியுள்ளது. உழவர்கள் மட்டும் தான் உண்மையாக வாழ்பவர்கள் ஏனென்றால் மற்றவர்கள் அனைவரும் உழவுத் தொழில் செய்பவர்களை நம்பி வாழ்கின்றார்கள்.

"உழுவார் உலகத்தார் காணிய ஃதாற்றா
தெழுவாரை எல்லாம் பொறுத்து'

(குறள் - 1032)

உலகல் இன்பங்களை இழந்து உண்மையாது துறவு சென்றவர்கள் சிலர். பலபேர் உண்ண உணவு கிடைக்காமல் துறவு சென்றவர்கள் வறுமையிலிருந்து தப்பித்துக்கொள்ள அன்றைய மக்கள் கடைப்பிடித்த வழி. மேலும் எல்லாவற்றையும் துறந்துவிட்ட துறவிகள் கூட உழவர்கள் இல்லையென்றால் இல்லாமல் போவார்கள் முற்றும் துறந்த முனிவர்களுக்கும் உணவளித்து வாழ வைப்பதால் அவர்களை விடவும் உழவர்களே சிறந்தவர் என்கிறார் வள்ளுவர்.

"உழவினார் கைம்மங்கின் இல்லை விழைவதூஉம்
விட்டேமென் பார்க்கும் நிலை"

(குறள்- 1036)

ஆகவே அரசர்கள், துறவிகள், அந்தணர் என எல்லோரையும் விட உழவர்களே அன்றைய சமுதாயத்தின் மேற்குடி மக்கள் என்பது வள்ளுவரின் கருத்தாகும்.

ஏர் கால் வகை :

முக்கூடற்பள்ளில் உழவுத் தொழிலுக்குப் பயன்படும் கலப்பைகளில் வகைகளைக் கூறப்பட்டுள்ளது. பரம்புச்சட்டம், நுகம், கழுழ்து எனக் கலுப்பையின் பெயர்களை வகைப்படுத்தப் பட்டுள்ளதை அறிய முடிகிறது.

கயமரம் ஒன்றுவளைக் கையொன்று நுகமொன்று

கழுந்தேர்க்கால் ஒன்று கைக்கோல் ஒன்று
வயலுழுங் குத்தியொன்று வளைமேழி ஒன்றிந்த
வகையோழும் அந்த ஏழு மரத்தால் செய்தே

(முக்கூ-111)

இப்பாடலில் தசரத மன்னனின் மகனான தாமரைக் கண்ணை உடைய திருமால் வில்லை வளைத்து ஒரே அம்பில் ஏழு மரங்களை அம்பேவித் துளைத்த அந்த நாளிலே கயமரம் ஒன்றும் கசமரத்தை கத்தடியோடு இணைக்கும் மரக்கருவி ஒன்றும் நுகர்தடி ஒன்றும் துனியை உடைய ஏர்கால் ஒன்றும் தார்குச்சி ஒன்றும் நிலத்தை உழவு செய்யும் கருவி ஒன்றும் நிலத்தை உழவு செய்யும் கருவியாகும். ஏர்கால் அடிப்புறம் இணைத்து வளைவாக உள்ள உறுப்புகள் ஏழு வகை மரங்களால் செய்து பத்தரப்படுத்தி வைத்துள்ளான்.

நல்லநாள் பார்த்தல் :

உழுவதற்கு நல்ல நாள் பார்க்கும் வழக்கமும் விதைப்பதற்கு நல்ல நேரம் பார்ப்பதும் பண்டைய வேளாண் மரபில் உள்ள முக்கியமான கூறுகளாகும். ஏர்வகைகளையும் விதைவகை, ஏர்க்கால் வகை ஆகியவற்றைக் சிறப்பாக பண்ணைக்காரன் அறியும் படி பள்ளன் எடுத்துக்கூறுகிறான். அதன் பின் அனைவரும் போற்றி வணங்கும் தன்மை உடைய அழகான பண்ணைக்காரன் சோதிடன் கூறிய நல்ல நாளை பள்ளனுக்கு தெரிவித்தான்.

ஏரும் பல விதையும் ஏர்க்கால் முதலியன
சீரும் அழகக் குடும்பன் செய்திபெறச் சொல்லியபின்
ஆரும் பரவும் அழகர் பண்ணையான் கேள்வி
கூரும் முகிழ்த்தம் குடும்பனும் சொன்னானே
(-113)

இங்கு முகிழ்த்தம் என்பது இன்று வழக்கில் உள்ள முகூர்த்தம் என்பதாகும்.

சப்தமி, புதன்கிழமை, சுவாதி நட்சத்திரம் கரணம் சுபயோகம் நிறைந்த வேளை நல்லதென்று சோதிடர்கள் குறித்துக் கொடுத்த துலாமுகூர்த்தத்தல் பக்தர்கள் வணக்கும் முக்கூடலில் கோயில் கொண்டிருக்கும் அழகரின் வயில்களுக்கு ஏர்பூட்டி உழவேண்டும் என்று பண்ணைக்களின் பள்ளண்டு உத்தரவு கொடுத்தான். பண்ணைக்காரனின் உத்தரவைக் கேட்ட பள்ளன் ஏற்றினை எடுத்துக்கொண்டு வயலில் உழச் சென்றான். (இரவிச்சந்திரன். சி.மா.2015:01)

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்

மூத்த பள்ளியின் சொற்களைக் கேட்ட பண்ணைக்காரன் முக்கூடற் பள்ளனின் காலில் சேர்த்துக் கட்டிய மரத்தை நீக்கியபின் அவனுக்குச் செய்ய வேண்டிய உபசாரங்களைச் செய்து அவன் செய்ய வேண்டிய கடமைகளை எடுத்துக் கூறியபின் பள்ளன் திருமாலின் பண்ணைக்காரனின் முன்பு நல்ல விதை வகைகளையும், மாட்டு வகைகளையும் உழவு முறையில் எடுத்துக் கூறுகின்றான்.

விதை வகை :

பக்குவப்படுத்தப்பட்ட நெல் விதைகளை முக்கூடற்பள்ளில் காணமுடிகிறது. சித்தரக்காலி, வாலான், சிறை மீட்டான், மணல் வாரி. செஞ்சம்பா, கருஞ்சூரை. சீரகச்சம்பா, முத்து விளங்கி, மலைமுண்டன், பொற்பாளை. நெடுமூக்கன், அரிக்கிராவி, மூங்கில் சம்பா, கத்தூரிவாணன், காடைக் கழுத்தன், இரங்கல் மீட்டான், கல்லுண்டை, பூம்பாளை, பாற்கடுக்கன், வெள்ளை புத்தன், கருங்குறுவை, புனுகுச்சம்பா ஆகிய நெல் வதைகளை இரண்டு போகத்திற்கும் சேர்த்து சேரில் விதைத்தான் என்று பள்ளன் பண்ணைக்காரரிடம் கூறினான்.

மாடுகளின் வகை :

உழவுத் தொழில் சிறக்க மாடுகளும் மனிதரோடு சேர்ந்து உழைத்ததை முக்கூடற்பள்ளு விளக்கிக் கூறுகிறது. குடைக்கொம்பன், செம்மறையன், குத்துக்குளம்பன்,மோழை,குடைச்செவியன், குற்றாலன், கூடுகொம்பன். வடப்புல்லை, கரும்போரான், மயிலை, கழற்சிக் கண்ணன், மட்டைக்கொம்பன், கறுப்பன், மஞ்சள் வாலன், படப்புப் பிடுங்கி, கொட்டைப் பாக்கன், கருமறையன், பசுக்காலன், அணிற்கலன், படலைக்கொம்பன், விடர்த்தலைப் பூ நிறத்தான். வெள்ளைக்காளை, என மாடுகள் ஆயிரம் வகை உண்டு என முக்கூடற்பள்ளு கூறுகிறது.

உழவுத் தொழில் செய்யும் பள்ளர் வகை :

வயல் உழும் வேலையைத் தனித்தனியே செய்யாமல் மக்கள் ஒன்று கூடி உழுதனர். சாத்தன்,பெரியான். கொன்னைத்தாண்டி, அரியான். கடையான். உடையான், உட்டைச் சங்கன், புங்கன், போத்தன், அருகன், கோணப்பூவன், மருதன், பூலான், வயித்தி, வேலான்.புலியன், கலியன், காத்தன்,சிவருகன், கப்புக்காலன், முருகன், கண்டன், கறித்த முண்டன். கங்கன்,சிங்கன்,கூத்தன் முதலாக உள்ள பள்ளர்கள் அனைவரும் குலவையிட்டு ஏர்ப்பூட்டி உழுதனர். (முக்-115)

உழுது விதைத்ததல்

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்

பள்ளன் உழவு செய்யத் தொடங்கினான். உழவு செய்த நிலத்தைக் கண்டு மகிழ்ச்சியடைந்தான். வயலில் இருந்த பள்ளர்களை எல்லாம் அழைத்து தெய்வத்தை வழிபட்டு காணிக்கைச் செலுத்தினான். உழுத நிலத்தில் விதைகள் விதைக்க தொடங்கினான்.

இதனை

மெள்ளப் புருவங் கோட்டி நெரித்தான் - மாட்டை
மீளவும் பூட்டியழற் திரித்தான்
உழுத உழவைக் கண்டு களித்தான் - பள்ளர்
உள்ள பேரையெல்லாம் விளித்தான்
தொழுது தெய்வக்கடன் கழித்தான் அந்தத்
தொளியில் விதைகள் எல்லாம் தெளித்தான் (முக்-121,122)

என்ற பாடல் தெளிவாக்குகிறது. எவரையும் ஒதுக்கி விடாமல் ஒவ்வொருவரிடமு கருத்துக் கேட்டு கடவுளுக்குண்டான கடன்களைச் செய்து விதைப்பதை மரபாக கொண்டுள்ளதை இது காட்டுகிறது.

பயிர் வளர்த்தல் :

பள்ளன் வயலில் தெளித்த விதைகள் முளை விட்டதைக் கண்டு அதற்கு முறைப்படி தண்ணீர் இறைத்தான். வயலில் இருந்த மரங்களை வெட்டி அதன் கொம்புகளைக் கொண்டு நாற்றங்கால் சுற்றி வேலி அமைத்தான் நாற்று நல்லபடியாக வளர்தற்காக மன ஒருமைப்பாட்டுடன் தொழில் செய்தான். நாற்று வளர்ந்ததைக் கண்ட பள்ளன் பள்ளர் சேரியில் பள்ளர்களுடன் சேர்ந்து மது உண்டான். அளவில்லா மகிழ்ச்சி கொண்டான். உடனே பண்ணைக்காரருக்கு நாற்று வளர்ந்த செய்தியை தெரிவித்தான்.

இதனை

முளைக்குத் தண்ணீரை அடைத் திட்டான் - கொள்ளை
முழுதும் மறுநாள் வெட்டி விட்டான்
வளைத்து வேலி சூழ நட்டான் - நாற்று
வளர்க்க நாளும் ஒருப்பட்டான்

(முக்- 123)

என்ற பாடல் கூறுகிறது. அதன்பிறகு பள்ளன் பள்ளர்களோடு கூடி மது உண்டு மகிழ்ந்தான். பின்பு பண்ணைக்காரரிடம் சென்று செய்தியைக் கூறினான்.

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்

மணம் வீசும் துளசிமாலை அணிந்த திருமாலன் முக்கூடல் நாட்டில், வயல்களில் எல்லாம் வளர்கின்ற நாற்றினை நடவேண்டும் என்று பண்ணைக்காரிடம் தெரிவித்தான். அவன் கட்டளைப்படி ஏற்றுத் திரும்பினான்.

நாற்று பறித்தல்:

நாற்று பறிப்பதற்கு முன்பு அழகரின் பாதங்களை வணங்கி நாற்று முடியை எடுத்துக் நெற்றியில் வைத்துக் கொண்டு நான்கு திசைகளையும் வணங்கி, நாற்று நடுபவர்களை பிரித்து நிறுத்தி நாற்றுகளை பறித்துக் கொடுப்பார்கள்.

இதனை,

அந்தத் தொளிக்குச் சமைந்த நாற்றை
அடுத்தவயலில் பிடுங்கி வேறே
அடுக்கி முடிந்த வட்ட வட்டங்
களாய்க் குவித்தபின்

(முக்-126)

என்ற பாடல் தெளிவாக்குகிறது.

நடுகை :

காம்பெல்லா கொத்து கொத்தாகப் பூத்திருக்கின்ற பூந்துளசி மாலையை அணந்தஅழகரது முக்கூடல் நகர், சேறு படிந்த கால்களை உடையவரான பள்ளர்களுக்குத் தென்றல் காற்றினால் என்ன விளைவு உண்டாகுமோ? இதனால் ஆற்றக்கால் ஆட்டியர்களாகிய பள்ளியர்கள் மனத்தில் ஊடல் ஆட்டம் எழுந்த காலத்தல் வயல்களில் நடவெல்லாம் நாற்றுக் காலை விட்டு நடுகைக்கு வராமல் போய்விடும் பெண்களின் ஊடலினால் தென்றலின் பெயரால் நடவு பாதிக்கப்படும் என்கிறார்கள். (முக். 128)

பயிர் விளைவு:

நாற்றங்காலில் செழித்து அடர்த்தியாகவும் பசுமையுடனும் நாற்றுக்கள் நட்டபோது தலை கவிந்து கிடந்தாலும், விரைவில் பயிர்கள் வேரூன்றி ஓங்கி வளரத் தொடங்கின.உலகில் பசிக்கு உணவளித்தவர்கள் செல்வம் குறைந்து வறுமைநிலை அடைந்தாலும் செல்வமானது ஓங்கி வளரும் என்ற நம்பிக்கை இம்மக்களுக்கு உண்டானது.

நடவு செய்த பயிர்கள் நன்றாக நலைபெற்று பசுமையாக வளர்ந்து வேர்பிடித்துப் வளர்ந்திருந்தன. நல்ல தமிழ் இசைக்குத் தலையசைக்கும் திருமால்

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்

போல் நெற்பயிர் வளர்ந்து கதிர்கள் வெளிக்காட்டி நின்றது. நெற்பயிர்கள் முற்றிய பின் கதிர்கள் இரவலர்க்கும் பொன் வழங்கும் தாள்கள் முதிர்ந்து கதிர்கள் விளைச்சலைக் காட்டிக் கொண்டிருந்தன. இதனை.

பதிந்தே நடவு தேறிப் பசப்பும் ஏறிப்
பசந்து குருத்து மேன்மேற் பரந்து செறிந்து
முதிர்ந்த தமிழிசைக்கு முடியசைக்கும்
முதல்வரெனத் தழைத்து

(முக்-136)

என்ற பாடல் தெளிவு படுத்துகிறது.

நெல் அளக்கும் முறை:

பின்பு முற்றி விளைந்த கதிர்களைப் பார்த்து பள்ளன் பண்ணைக்காரனிடம் சென்று அனுமதிபெற்று அருவடைக்கு தொடங்கினான். அவனோடு ஏனைய பள்ளரும் வந்து அருவடை செய்தனர். பண்ணையில் விவசாயம் செய்ய ஒப்பந்தம் செய்து கொண்ட பண்ணைக்காரர் முன்பாகவே, தினசரி அடியார்களுக்குச் உணவளிக்கும் மடங்களுக்கும் பெரிய நம்பி அய்யங்காரின் மாளிகைக்கும். ஏழுதிருப்பதிகளில் தினப்பூசைக்கும் அங்கு மக்கள் ஏற்படுத்திய கட்டளைகளால் கோயிலைச் சார்ந்து வாழ்பவர்களுக்கும் இனிய குணமுடைய வடமலேந்திரன் படத்துக்கும் வேண்டிய நெல்லை மரக்காலில் அளந்து கொடுத்தான். (முக்-140) இவ்வாறு விளைந்த நெல்லை காணிக்கை கொடுப்பது வேளாண் மரபுகளில் ஒன்றாகும்.

நெல் கணக்குக் கூறல்:

தென்முக்கூடலில் நகரில் மாயவனார் அழகரின் பண்ணையில் வயலில் விளைந்த நெற்பயிர்கள் அளந்த நெல் இவ்வளவு என்பதும், கிடைத்த இலாபத்தையும் செலவையும் பண்ணைக் காரனுடன் களத்தில் நின்று மனம் தடுமாற்றம் இல்லாமல் பள்ளன் உள்ளது உள்ளபடியே எடுத்துக் கூறினான். நெல் அளக்கும் கணக்கை சொல்லினான் பள்ளர்கள் வேலையில் கவனம் கொண்டு நெல் அளக்கும் கணக்கை மறந்து விடாதீர்கள் என்று பள்ளன் கூறினான். (முக்-141)

பள்ளன் நெல் அளத்தல்:

அளக்கும் பொலிக் கணக்கைப் பண்ணை

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்

ஆண்டே சொல்லிக் கேளும் - பள்ளர்
வளர்க்கும் பல பெருந் சோலியில்
மறவாதிருஞ் சொன்னேன்.

ஆடித் திருநாளுக்கு நெல்
ஆறாயிரங்கோட்டை - நெட்டைத்
தாடிப்பிச்சன் நேருஞ் சம்பா
நெல் அளந்தேன்

வருபங்குனித் திருநாட்படி
வகைக் காயிரம் கோட்டை - சின்னத்
திருவன் பயிரிடும் புள்ளியில்
செந்தாழை நெல் அளந்தேன்

சிற்றாற்றணைக் கல்லுங் கட்டச்
செல வாயிரங் கோட்டை-பண்ணைப்
பெற்றக்குடும்பன் புள்ளியிற்கண்ட
பெருவெள்ளை நெல் அளந்தேன்

(முக்-142,143,144,145)

ஆடித்திருநாளுக்கு நெட்டைத் தாடிப்பிச்சன் வகையில் இருந்து வந்து நெல்லில் சம்பா நெல்லை ஆயிரம் கோட்டை அளந்தேன். ஒரு கோட்டை 21 மரக்கால் அளவுடையது.பங்குனித் திருவிழாவிற்காக்க கொடுக்க வேண்டிய ஆயிரம் கோட்டை நெல்லை சின்னத்திருவன் பயிரிடும் நிலத்தில் இருந்து வந்த செந்தாழை என்னும் நெல்லில் இருந்து அளந்தான். சித்தா நதியில் இருக்கும் அணையை கல்வைத்தக் கட்டும் செலவுக்காக ஆயிரம் கோட்டை நெல்லைப் பெற்றார்க் குடும்பன் வகையில் வந்த பெருவெள்ளை என்னும் நெல்லில் இருந்து அளந்தான்.

கோயில் உற்சவத்துக்காக ஒன்றுக்கு ஆயிரம் கோட்டைகள் வீதம் கட்டை முண்டன் வகையில் வந்த முத்து வெள்ளை நெல்லில் அளந்தான். அரசர், அந்தணர், வணிகர், வேளாளர், வேதம் ஓதுவார் ஆகியோருக்கான நான்காயிரம் கோட்டை நெல்லைப் பச்சை மூவான் வகையில் வந்த மலை முண்டன் என்னும் நெல்லில் இருந்து அளந்தான்.

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்

மேற்கூறப்பட்டவை தவிர கோயில்களின் தினப் பூசைக்காக எட்டாயிரம் கோட்டை நெல்லை மொண்டிப பொதுவின் புதிய நிலத்தில் இருந்து வந்த பூம்பாளை நெல்லில் அளந்தான்.

நெல் அளந்த கணக்கை என்னால் முழுமையாகக் கூறமுடியாது என்பதை கூறுகின்றன. அதனால் மீதம் இருந்த நெல்லையும் விதை நெல்லையும் கட்டி வைத்திருக்கின்றான். ஆகிய செய்திகளை இப்பாடல்கள் உணர்த்துகின்றன.

வழிபாடும் நம்பிக்கையும்:

காரிமாறனின் மகனாகிய நம்மாழ்வார் திருமாலைப் பாடிப் பரவுவதற்காகப் படைத்தளித்த திருமாலைப் பாடிப் பரவுவதற்காகப் படைத்தளித்த வேதமாகிய திருவாய் மொழியைப் பாடி முக்கூடலில் கோயில் கொண்டிருக்கும் பண்ணிசை பாடுவதற்கு உரியவனான அழகரின் நாட்டில் மழைவளம் சிறக்க வேண்டும் என்பதற்காக உழவுத்தொழில் செய்யும் பள்ளர் இனத்தவர்கள் எல்லாம் அவர்கள் வாழும் சேரிப்பகுதியில் குலவை என்னும் ஒலியினை எழுப்பித் தெய்வத்திடம் வரம் கேட்டனர்.

முக்கூடல் நகரில் மழைவளம்வேண்டி மக்கள் வழிபாடு நடத்துகின்றன. பள்ளர்கள் மழைவளம் வேண்டித் தெய்வவழிபாடு செய்தனர். மாதம் மூன்று முறை உலகமுழுவதும் மழை பெய்வதற்காகத் தெய்வங்களைக் சைதொழுது வணங்க வேண்டும். பொங்கல் வைத்துத் தேங்காயும் கரும்பும் பூலாவுடையார் என்னும் கிராம தெய்வத்திற்கு சடங்குகள் செய்தன. குங்குமப் பொட்டோடு சந்தனம் சேர்த்து கூட்டமாகச் சென்று உடையாரயர் என்னும் கிராமத் தெய்வத்திற்கு அணிவித்தனர் வழிபாடு நடப்பதற்கு முன் காப்புகட்டினர்.

தெய்வங்களுக்கு வழிபாடு நடத்துவதற்கு முன்பு காப்புக்கட்டி ஏழு ஆட்டுக்கிடாய்களை ஆற்றங்கரையில் வீற்றிருக்கும் ஐயனார் முன்பு வெட்டிப் பலி கொடுப்பார்கள். புலியூருடையார் என்னும் கிராமக் காவல் தெய்வம் ஏற்றுக் கொள்ளும்படி மலர்ந்திருக்கும் பூப்போன்ற கொண்டையினை உடைய செம்மை நிறச் சேவலைப் பலி கொடுப்பார்கள். வடக்குவாய்ச் செல்வி உண்ணுவதற்காக நல்ல சாராயத்தையும் பனைமரப் பாளை சீவி அதிலிருந்து ஊறிய கள்ளையும் குடம் நிறைய கொடுப்பார்கள். மழை பெய்யவேண்டும் என இறைவனை வேண்டி முக்கூடலில் வாழும் அழகரை உயர்வாக போற்றி பள்ளர்கள் அனைவரும் பாடினார்கள்.

முக்கூடலில் எழுந்தருளிக் கோயில் கொண்டிருக்கும் திருமாலின் பாதங்களை வணங்கி வழிபாடு வெய்யும் பண்ணைத் தொழில் புரியும் பள்ளர்கள் அனைவரும் வணங்க வேண்டிய முறையில் தெய்வங்களை வழிபட்டனர்.

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்

அனதால் வானத்தில் மேகம் எல்லாத் திசைகளிலும் பரவி மழை பெய்வதற்கான குறியை உண்டாகச் செய்தது.

உலகமெல்லாம் போற்றி வழிபடும் திருமாலான அழகருக்கு ஏற்றவர்களான கோயில் வாழும் பள்ளர் இனத்தவர்கள் துள்ளிக் குதித்து மகிழ்கின்றனர். நாளை ஆற்றில் வெள்ளம் வருவதற்கான அறிகுறிகள் தோன்றுகின்றன. தென்மேற்குத் திசையில் உள்ள மலையாள மின்னலும் தென்கிழக்கு திசையில் உள்ள இலங்கை நாட்டுத் திசையில் மின்னல் மின்னுகின்றன. ற்ேறும் இன்றும் மரக்கிளைகள் சுற்றியவாறு காற்று அடிக்கிறது. கிணற்று நீரிலே வாழும் சொரித் தவளைகள் கத்துகின்றன. சேற்றிலே வாழும் நண்டுகள் தன் வளைகளுக்குள் தண்ணீர் புகுந்துவிடாமல் சேற்றினால் அதன் வளைவாயில்களை அடைக்கின்றன. மழை நீரைத் தேடி ஒரு கோடி வானம்பாடிப் பறவைகள் அங்கும் இங்கும் வானத்திலே பறந்து ஆடிக் கொண்டிருக்கின்றன. மழைக்குறியினை அறிந்த பள்ளர்கள் ஆடிப்பாடி துள்ளிக் கொண்டாடுகிறார்கள்.

முக்கூடல் நகரில் கோயில் கொண்டிருக்கும் அழகரை வழிபடும் பள்ளர்கள் அனைவரும் குலவை இட்டு ஆடிப்பாடி புறப்பட்டார்கள். இரவு நேரம் என்றும் நள்ளிரவு நேரம் என்று யோசனை செய்யாமல் தாமிரபரணியில் வெள்ளம் வரும் போது இந்தக்கரைப் பக்கம் அந்தக்கரை பக்கம் என்று சிந்தனை செய்யாமல் புறப்பட்டுச் செல்ல வேண்டும். அதற்கு வசதியாக படகினைப் பத்திரமாகக் கட்டி வைத்து கொள்ள வேண்டும். மழையில் நனையாமல் காத்துக் கொள்ளப் பயன்படும் படல், தாழை மடல்களால் செய்யப்பட்ட குடை, கொங்காணி ஆகியவற்றை எடுத்து வைத்தார்கள் கரைகளை அடைக்கப் பயன்படும் கழிகள் வெளிச்சத்திற்காகப் பயன்படும் துணி சுற்றப்பட்ட தீப்பந்தத்தையும் பந்தம் கொளுத்துவதற்கான விளக்கெண்ணெயி னையும் தயராக வைத்துக் கொள்ளுங்கள். என்று மழை நாளுக்காக ஆயத்தமானார்கள்

மழை பெய்தல் :

ஆற்று நீர்,ஊற்றுநீர்,மழைநீர் என்றும் மூன்று நீரையும் தன்னகத்தே கொண்டிருக்கும் கடலில் நீரை முகர்ந்து மழைமேகமாக மாறிய மேகம் மழைத் தூறல்களை தனக்குரிய கால்களைக் கொண்டு மழைக்காலம் என்று சொல்லும்படி மழை பெய்தது.

இவ்வாறாக கூடல்நகர் செழித்து இருப்பதற்கு மழைவளம் முக்கியகாரணமாக அமைகிறது. இதனால் வேளாண் தொழில் சிறந்து விளங்குகிறது.உழைப்பதற்கு அம்மக்கள் சளைத்தது இல்லை. ஒற்றுமையுணர்வுடன்

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்

வேளாண் தொழிலை மரபுகள் மாறாது இறைநம்பிக்கையோடு செய்து வருகின்றனர் என்பது இதன் மூலம் புலனாகிறது.

முடிவுரை

- குறிஞ்சி மலைப்பகுதியில் பெய்தமலை காட்டாறாக உருவெடுத்து பாலை, முல்லை, மருதம் ஆகிய நிலங்களைக்கடந்து நெய்தலில் கலக்கிறது. ஏனைய நான்கு நிலங்களில் இருந்து கொண்டு வந்த பொருட்களை வருண பகவானுக்குப் படையல் செய்வது போல் நெய்தல் கடலில் கலக்கிறது.
- ஒரு போகம் பயிர்செய்யும் காலத்தில் நடந்த நிகழ்வுகளை முக்கூடற்பள்ளு பதிவு செய்துள்ளது. பல வகையான உழவுக்கருவிகள், நெல்வகைகள், மாடு வகைகள், மீன் வகைகள் ஆகியவற்றை முக்கூடற்பள்ளு ஆவணப்படுத்தியுள்ளது.
- மழைக்குறி, மழைப்பொழிவு, நாள் பார்த்தல், விதைத்தேர்வு, விதைத்தல், நடவு, விளைச்சல், அறுவடை, நெல் அளத்தல், காணிக்கை செலுத்துதல் ஆகிய வேளாண் மரபுகளைப் பட்டியல் இட்டுச் சொல்கிறது.
- முக்கூடற்பள்ளு ஆண்டை, அடிமை என்ற நிலையைக் கூறினாலும், பள்ளர்கள் ஒற்றுமையோடு உழவுத்தொழில் செய்வதையே உணர்த்தி நிற்கிறது.வேளாண்மை செய்வதன் தொன்மையான மரபுகளைத் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டியுள்ளது.

துணைநூற்பட்டியல்

[1] கதிர்முருகு, முக்கூடற்பள்ளு சாரதா பதிப்பகம் ராயபேட்டை சென்னை-14, 2010.

[2] சதாசிவம்.ஆ,ஞானப்பள்ளு (மீள் பதிப்பு) சதாசிவம் பதிப்பகம் கொழும்பு-13 2018

[3] செந்தில் நாதன், கனக, ஈழத்து இலக்கிய வளர்ச்சி,அரசு வெளியீடு,இலங்கை - 1934

[4] சேதுரகுநாதன்.ந,முக்கூடற்பள்ளு, திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை-1, 1973

[5] பரிமேலழகர்,திருக்குறள் உரை, கழகவெளியீடு, சென்னை-56, 1976

[6] புலியூர்க்கேசிகன்,முக்கூடற்பள்ளு, சாரதா பதிப்பகம்,ராயபேட்டை, சென்னை-14 2010.

==========

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்